# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,615 — 1940 ம் ௵ வைகாசி௴ 17 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அசாட்சியாரின் விளம்பரம்.

M. L. A.—B 699
L. D.—B 15/40

**நாய்களைப் பதிவுசெய்தற்கான சட்டம்.**

நாய்களைப் பதிவுசெய்தற்கான சட்டத்தின் (அதி : 334) 4 ம் பிரிவின்படி ஹட்டன்–டிக்கோயா நகரசங்கத்தின் காரியபாகம் நடத்தும் எல்லைக்குள் வழங்குவதற்காக, அதன் பொருட்டு முறைமையான அதிகாரியால் அதாவது ஹட்டன்–டிக்கோயா நகரசங்கத் தலைவரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.

சி. செல்வின் சமறவீர,
நகர சங்கக் கந்தோர், நகரசங்க தலைவர்.
ஹட்டன்–டிக்கோயா, 1910 ம் ௵ மே௴ 6 ந் உ.

உபவிதிகள்.

1. இவ்வுபவிதிகளில் " தலைவர் " என்பது ஹட்டன்–டிக்கோயா நகர சங்கத் தலைவர் எனப்பொருள்படும். " வருடாந்தப் பதிவு வேதனம் " என்பது சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இறுக்கப்படவேண்டிய வருடாந்தப் பதிவு வேதனம் எனப் பொருள்படும். " சொந்தக்காரன் " என்பது ஒரு நர்ய் சம்பந்தமாக, அந்நாயைத் தன் பாதுகாவலில் அல்லது உடைமையாக வைத்திருப்பவனையும் உளப்படுத்தும்.

2. (1) 6 மாதத்திற்கு மேற்பட்ட வயதுடைய யாதேனுமொரு நாய் வைத்திருக்கப்படும் எந்த வீட்டிலேனும் வளவிலேனும் குடியிருப்பவர், இத்துடனுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட மாதிரிப்பத்திரத்தில் விவரத்திரட்டொன்றினை ஒவ்வொரு வருடத்திலும் பங்குனி௴ 1 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) எவ்வருடத்திலாவது பங்குனி௴ 1 ந் தேதிக்குப் பின்னர் எவராவது எந்த வீட்டிலேனும் வளவிலேனும் ஒரு நாயை வைத்திருக்க தொடங்குமிடத்து, அத்தகைய வீட்டில் அல்லது வளவில் குடியிருப்பவர் இத்துடனுள்ள அட்டவணையில் காட்டப்பட்ட மாதிரிப்பத்திரத்தில் மேலதிகமான விவரத்திரட்டொன்றினை உடனே தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

3. வருடாந்தப் பதிவு வேதனம்,—

(*a*) 2 (1) ம் உபவிதியின்படி விவரத்திரட்டு அனுப்பப்பட்டுள்ள ஒரு நாய் விஷயத்தில், எந்த வருடத்துக்குக் கட்டவேண்டுமோ அவ்வருடத்தின் சித்திரை௴ 1 ந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் ; அல்லது

(*b*) 2 (2) ம் உபவிதியின்படி மேலதிகமான விவரத்திரட்டொன்று அனுப்பப்பட்டுள்ள ஒரு நாய் விஷயத்தில், அத்தகைய மேலதிகமான விவரத்திரட்டு அனுப்பிய திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், ஒவ்வொரு நாயின் சொந்தக்காரனால் கட்டப்பட வேண்டும்.

4. வருடாந்தப் பதிவு வேதனம் கட்டியதும், தலைவர், அந்த நாயின் சொந்தக்காரனுக்கு—

(i.) பதிவுச் சான்றுரைப்பத்திர மொன்றையும்,

(ii.) பதிவுச்சான்றுரைப் பத்திரத்தின் இலக்கம் குத்தப்பெற்ற ஓர் உலோகத்தகட்டினை அல்லது கழுத்துப்பட்டியையும், கொடுப்பார்.

ஆயின் பதிவு செய்வதற்கு விண்ணப்பஞ்செய்யப்பட்டுள்ள எந்த நாயினையும் தலைவர், தமது பார்வைக்குக் கொண்டுவரும்படி கேட்கலாம். மேலும்,

(*a*) அந்த நாய் பார்வைக்குக் கொண்டுவரப்படாதிருப்பின் ; அல்லது

(*b*) அந்த நாய் தலைவருடைய கருத்தின்படி, வாழ்வதற்குத் தகுதியற்ற முறையில் அங்கவீனப்பட்டு அல்லது நோய்வாய்ப்பட்டு அல்லது பிறநாய்களுக்கு நோய் தொற்றும்வாயிலாக நோய்வாய்ப்பட்டிருப்பின், அல்லது

(*c*) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக துன்புறுத்தப்பட்டிருப்பின் அல்லது புறக்கணிக்கப்பட்டிருப்பின் ; அந்த நாய்க்கு பதிவுச் சான்றுரைப்பத்திரத்தையும் உலோகத்தகட்டினை அல்லது கழுத்துப்பட்டியையும் கொடுக்க மறுக்கலாம்.

5. யாதேனுமொரு நாய்க்கு பதிவுச்சான்றுரைப்பத்திரம் கொடுபட்டபின், அந்த நாயினுடைய சொந்தக்காரனின் விலாசத்திற்கு அறிவித்தல் கொடுத்தபின்னர்,

(*a*) அந்த நாய் தலைவருடைய கருத்தின்படி வாழ்வதற்குத் தகுதியற்ற முறையில் அங்கவீனப்பட்டதாகி அல்லது நோய்வாய்ப்பட்டதாகி விடின் ; அல்லது

(*b*) அந்த நாய், சொந்தக்காரனால் வழக்கமாக துன்புறுத்தப்பட்டிருப்பின் அல்லது புறக்கணிக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(*c*) அந்த நாய், தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் பொழுது, வேறெந்த நாயுடனும் ஊடாடித் திரியச் சொந்தக்காரன் விட்டிருப்பின்,

(*d*) அந்த உலோகத்தகடு அல்லது கழுத்துப்பட்டியின்றி அலைந்து திரியக் காணப்படின்,

அத்தகைய பதிவுச்சான்றுரைப்பத்திரத்தைத் தலைவர் அழித்துவிடலாம்.

6. (1) 4 ம் உபவிதியின்படி பதிவுச் சான்றுரைப் பத்திரம் மறுக்கப்பட்ட அல்லது 5 ம் உபவிதியின்படி அழிக்கப்பட்ட யாதேனுமொரு நாயின் சொந்தக்காரன், தலைவர், அறிவித்தற் பத்திரம் அனுப்பியதும். அவ்வறிவித்தலிற் குறிப்பிட்டிருக்கும் நேரத்திலும் இடத்திலும் அந்த நாயைக் கொண்டுசென்று காட்டவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு நாயும் தலைவர் தகுதியெனக் கருதும் வகையில் அழிக்கப்படலாம் அல்லது விநியோகிக்கப்படலாம்.

7. உலோகத்தகடு அல்லது கழுத்துப்பட்டி கிடைக்கப்பெற்றுள்ள யாதேனுமொரு நாயின் சொந்தக்காரன், அந்த நாய் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட பதிவுச் சான்றுரைப்பத்திரம் பெலப்புடையதாகவிருக்கும் காலம் முழுவதும் அந்த உலோகத்தகட்டை அல்லது கழுத்துப்பட்டியை அந்த நாயின் கழுத்தில் பத்திரமாய் அணிவித்துக்கொள்வதற்கேற்ற வழிவகைகள் யாவற்றையும் கையாளவேண்டும்.

8. இந்த உபவிதிகளின்படி தலைவருக்குரிய தத்துவங்கள் எல்லாவற்றையேனும் அவற்றுள் எதையேனும் செலுத்துதற்கு அவர் எவருக்காவது எழுத்து மூலம் அதிகாரம் கொடுக்கலாம்.

9. 1937 ம் ஆண்டு தைமீ 15 ந் தேதியைக்கொண்ட 8,237 ம் இலக்க கெசற் பத்திரிகையில் பிரசுரஞ்செய்யப்பெற்ற, நாய்களைப் பதிவு செய்தலைப்பற்றிய உபவிதிகள் இத்தால் அழிக்கப்படுகின்றன.

அட்டவணை.

மாதிரிப்பத்திரம்.

இல :————.
வீட்டிலக்கம் : ————.
தெரு : ————.
கிராமப்பெயர் : ————.
தோட்டப் பெயர் :————.
குடியிருப்பவரின் பெயர் :————.

ஒப்புவித்த தேதி :
19— ம் ஞூ

இல :————.
19—ம் ஞூ பங்குனிமீ 1ந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் பூரணப் படுத்தி தலைவருக்கு அனுப்பப்பட வேண்டிய விவரணத்திரட்டு :————.
வீட்டிலக்கம் :————.
தெரு : ————.
கிராமப் பெயர் :————
தோட்டப் பெயர் :————.
குடியிருப்பவரின் பெயர் :————.

| வைத்திருக்கும் நாய்களின் தொகை | விவரம் | | | | | குறிப்பு | சொந்தக்காரனின் பெயர் | அடுத்த சித்திரைமீ 1 ந் திகதி யன்று அல்லது அதற்குமுன் கட்டவேண்டிய தேதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதி | ஆணோ பெண்ணோ | நிறம் | கழுத்தின் சுற்றளவு | விசேஷ அடையாளங்கள் | | | |
| | | | | | | | | |

ஒப்புவித்த தேதி :
19— ம் ஞூ

————
குடியிருப்பவரின் கையொப்பம்.

————
ஒப்புவித்தவரின் கையொப்பம்.

உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் இந்த விவரணத் திரட்டினைப் பூரணப்படுத்தி யனுப்பத்தவறின் 20 ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்குப் பாத்திரராக வேண்டி வரும்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

கொழும்பு-பியகம ரோட்டில் தல்வத்தவில், பி. டபிள்யு. டி. எம்பாங்மென்றுக்கு சிலாப்பிச்சிங் போடுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 1,144. குறிச்சி—தல்வத்த.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பற்றடோம்பகஹ ஒவிற்ற | புல்தோட்டம், பி. டபிள்யு. டி. ரோட்டு எம்பாங்மென்றுக்குப் போகும் சிலாப்பிச்சிங்கின் பகுதியுள்ளது | கனகரத்தின முதியான்செலாகே ஜுவன் பெறேரு, கறவித்தகே சோபியா அல்விஸ், கனகரத்தின முதியான்செலாகே ரேருகுஸ் பெறேரு, மேற்படி நிக்குலஸ் பெறேரு, மேற்படி மேறியா பெறேரு, மேற்படி ஜேன் பெறேரு, மேற்படி மார்த்தா பெறேரு, எல்லோரும் கோனவல, கனகரத்தின முதியான்செலாகே றன்சோ பெறேரு, மாவல்கம், வக | 0 0 5·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஞூ (ஜூன்) ஆனி மாதம் 12 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1940 ம் ஞூ (மே) வைகாசிமீ 13 ந் உ.

————

எல். எஸ். பி. பெறேரு,
மேல்திக உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் றத்தொட்டையில் மலசலம் குழிவெட்டிப் புதைக்குமிடம் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 626. குறிச்சி—குருவாவ.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1–10 | பெபொலயாயேவத்த அல்லது பட்டகேகும்புற | தோட்டம் .. | 1 ஸ்ரீமதி ஆர். உதலகம, வேறகம, (2) ஸ்ரீ எல். பீ. துல்லாவ, துல்லாவ, (3) ஸ்ரீமதி. டீ. பீ. கொப்பக்கடுவ, கடுகன்னுவ, (4) துல்லாவ டிக்கிரி குமாரிஹாமியின் மற்றும் உரித்தாளர்கள் | 2 0 34 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஞூ (ஜூன்) ஆனி மாதம் 14 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு இந்தக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரிதுத்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1940 ம் ஞூ (மே) வைகாசிமீ 13 ந் உ.

————

டீ. டபிள்யு. பி. பெரன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

வெலியத்தை-டிக்வல்லே ரோட்டு 3 ம் கட்டையைத் திருத்துவது என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

முடிந்த கிராமபடம் இல : 301. அனுபந்தம் 4. குறிச்சி—கலகம.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 293 | சியம்பலகஹகும்புற .. | வயலும் வரம்பும் .. .. | நவுறுனகே டொன் அந்திரயாஸ் (இறந்துபோனுர்) டிக்வலே பற்று, மற்றத் நானயக்கார மஹாடனகே டிங்கிஹாமி, கலகம்பற்று | 0 0 4·30 |
| 294 | அம்பகஹகும்புற .. | தோட்டம், அதில் முருங்கைமரம் 1, ஆறு வருஷஞ்சென்றது, பாக்குமரம் 1, இரண்டு வருஷஞ்சென்றது, கோ. கம்பமரம் 1, மூன்றுவருஷஞ் சென்றது | கே. சொன்னதாறதேரே, கலகம புத்தர்கோவில் .. | 0 0 0·73 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும்தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஆு (ஜூன்) ஆனி மாதம் 20 ந தேதியிலன்று 2.30 மணிக்கு கஹவத்தை கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

| | |
|---|---|
| அம்பாந்தோட்டைக் கச்சேரி, | சி. சிற்றம்பலம், |
| 1940 ம் ஆு (மே) வைகாசிமீ 9 ந வ. | உதவி அரசாட்சி ஏசண்டு. |

1876 ம் ஆு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டிப்பிற்றிய முஸ்லிம் பாடசாலைக்காக என்னும் பகிரங்க வேதைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 279. குறிச்சி—டிப்பிற்றிய.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பல்லேவத்த .. | பல பிரயோசனமுங்கொண்ட தோட்டம் | டிப்பிற்றியவிலிருக்கும் றீ. எஸ். சுல்தான் மரிக்காரும் அலியா மரிக்கார் அப்டுல்வகாபுவும் | 0 0 24·1 |
| 2 | ஷை .. | தென்னந்தோட்டம் .. | டிப்பிற்றியவிலிருக்கும் சுலைமான் லெப்பை முகம்மது இஸ்மெயில் அ. சலியா உம்மா | 0 0 23·3 |
| | | | | 0 1 7·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஆு (ஜூன்) ஆனி மாதம் 28 ந தேதியிலன்று காலை 11.30 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத்தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

| | |
|---|---|
| கேகாலைக் கச்சேரி. | எஸ். எப். அமரசிங்ஹ, |
| 1940 ம் ஆு (மே) வைகாசிமீ 8 ந வ. | உதவி அரசாட்சி ஏசண்டு. |

காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தின் 7 ம் பிரிவின் பிரகாரம் புதுக் காணிகளில் றப்பர் நடுகிறதற்கு காணி மாற்றலென்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்வரும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 268. குறிச்சி—பெலன்பிற்றிய.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | இலங்கை யுனைற்றெட் பிளான்ரேஸ் கம்பெனி லிமிற்றேட் (ஏஜென்ஸ்-பௌஸ்ரெட் சகோதரர்கள், கொழும்பு) | 11 | 1 | 2 |
| 2 | ஷை .. | ஷை .. .. .. | ஷை .. .. .. | 21 | 3 | 23 |
| 3 | — .. | கன்சபாவ பாதை .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 10 |
| 4 | — .. | ஷை .. .. .. | ஷை .. .. .. | 2 | 1 | 17 |
| 5 | வீபோத் .. | நிலையான கட்டடம் (வேலையாட்களின் லைன்ஸ்) கொண்ட 10–30 வயதுள்ள றப்பர் .. | ஷை .. .. .. | 14 | 0 | 14 |
| 6 | ஷை .. | நிலையான கட்டடம் (கோவில்) கொண்ட 10–30 வயதுள்ள றப்பர் | ஷை .. .. .. | 20 | 0 | 12 |
| 7 | — .. | காலடிப்பாதை .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 1 |
| 8 | வீபோத் .. | நிலையான கட்டடம்கொண்ட 10–30 வயதுள்ள றப்பர் | ஷை .. .. .. | 80 | 2 | 32 |
| 9 | — .. | தோட்ட றோட் .. .. | ஷை .. .. .. | 1 | 3 | 33 |
| 10 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 5 | 3 | 37 |
| 11 | ஷை .. | ஷை .. .. .. | ஷை .. .. .. | 41 | 0 | 16 |
| 12 | செயின் றம்போல்ட்ஸ் | 10–20 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 12 | 3 | 2 |
| 13 | ஷை .. | ஷை .. .. | ஷை .. .. .. | 3 | 0 | 17 |
| 14 | — .. | கன்சபாவ றோட்டு .. .. | ஷை .. .. .. | 0 | 2 | 31 |
| 15 | செயின்ற் றம்போல்ட்ஸ் | 10–20 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 8 | 0 | 21 |
| 16 | ஷை .. | சிறிய காடாகவிருக்கும் பத்தன .. | ஷை .. .. .. | 60 | 1 | 6 |
| 17 | — .. | கன்சபாவறோட்டு .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 28 |
| 18 | செயின்ற் றம்பொல்ட்ஸ் | 10–20 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 12 | 2 | 35 |
| 19 | ஷை .. | விடப்பட்ட தேயிலைகொண்ட பத்தன .. | ஷை .. .. .. | 1 | 3 | 38 |
| 20 | — .. | தோட்டப்பாதை .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 22 |
| 21 | — .. | 10–30 வயதுள்ள 3 றப்பர் மரமும் 1 விறகுமரமும் கொண்ட பாதை .. | ஷை .. .. .. | 0 | 0 | 18 |
| 22 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 0 | 2 | 13 |
| 23 | — .. | தோட்டப்பாதை .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 15 |
| 24 | — .. | ஷை .. .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 9 |
| 25 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 8 | 0 | 32 |
| 26 | ஷை .. | ஷை .. .. .. | ஷை .. .. .. | 5 | 1 | 26 |
| 27 | — .. | தோட்டப்பாதை .. .. | ஷை .. .. .. | 0 | 1 | 26 |
| 28 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 1 | 1 | 9 |
| 29 | — .. | தோட்ட றோட்டு .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 14 |
| 30 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 2 | 3 | 15 |
| 31 | ஷை .. | ஷை .. .. .. | ஷை .. .. .. | 2 | 3 | 23 |
| 32 | ஷை .. | ஷை .. .. .. | ஷை .. .. .. | 3 | 1 | 31 |
| 33 | — .. | தோட்ட றோட்டு .. .. | ஷை .. .. .. | 0 | 2 | 27 |
| 34 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 30 | 1 | 15 |
| 35 | — .. | தோட்ட றோட்டு .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 30 |
| 36 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 2 | 0 | 25 |
| 37 | — .. | தோட்டப்பாதை .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 2 |
| 38 | — .. | ஷை .. ... .. | ஷை .. .. .. | 0 | 0 | 15 |
| 39 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. .. | 2 | 2 | 22 |
| 40 | வீபோத் .. | விடப்பட்ட தேயிலைகொண்ட பத்தன .. | ஷை .. .. .. | 30 | 1 | 19 |
| 41 | — .. | தோட்டப்பாதை .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 17 |
| 42 | வீபோத் .. | 10–30 வயதுள்ள றப்பர் .. .. | ஷை .. .. | 67 | 1 | 17 |
| | | | | 448 | 3 | 17 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஸ்ரீ (ஜூலை) ஆடி மாதம் 3 ந தேதியிலன்று 10 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1940 ம் ஸ்ரீ (மே) வைகாசிமீ 3 ந உ.

எஸ். எப். அமரசிங்ஹ
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## நகரசங்க அங்கத்தவர் தெரிவுசெய்தல்.

*கம்பளை நகரசபை 1-வது தொகுதி அங்கத்தவர் தேர்தல்.*

கம்பளை நகர சபையின் 1-வது தொகுதிக்கு அங்கத்தவரொருவரைத் தெரிவுசெய்ய உத்தேசித்திருக்கிறதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு அபேட்சகரும் எழுத்தால் நியமிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு அபேட்சகரின் நியமனக்கடுதாசி தேர்தல் பிரிவின் (கம்பளை 1-வது தொகுதி) தெரிவு இடாப்பில் பதியப்பெற்ற குறைந்த பட்சம் இருவர்களால் கைச்சாத்திடப்பட்டு, தேர்தலுக்காக நியமிக்கப்பட்ட நாளாகிய 1940 ம் ஆண்டு ஆனிமீ 24 ந திகதி, திங்களன்று முற்பகல் 10 மணிக்கோ அல்லது அதற்கு முன்போ கம்பளை நகரசபை கந்தோரில் ஒப்புவிக்கப்படவேண்டும்.

ஒரு அபேட்சகருக்கு மேல் நியமிக்கப்பட்டால், கம்பளையிலுள்ள பழைய கல்ரல் கந்தோரில் 1940 ம் ஆண்டு ஆடிமீ 5 ந திகதி, வெள்ளிக்கிழமை வாக்குகள் எடுக்கப்படும். அவ்வாக்கெடுத்தல் முற்பகல் 9 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 1 மணிக்கு முடியும்.

ஈ. ரீ. டைசன்,
மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டு

கண்டிக் கச்சேரி,
1940 ம் ஸ்ரீ வைகாசிமீ 13 ந உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவர்களின் அறிவித்தல்கள்.

இத்தாற் சகலரு மறியவேண்டியது, களுத்துறையைச்சேர்ந்த றைகம் கோறளை, கும்புக்கவில் வசிக்கும் பெத்தகே, கபோசிஞ்ஞோ ஆகிய நான் 1907 ம் ஆண்டின் நம்பர் 1, செடூல் 1B யின் 2 ம் பிரமாணத்தின்படி மூன்று மாதங்கள் சென்ற பின்னர், என்னை பதுளைப் பகுதிக்கு ஓர் சிங்கள பிரசித்த நொத்தாரிசாக ஏற்படுத்திப் பதிவுசெய்யும்படி ஜெனறல் பதிவுகாரரிடம் கேட்டுக்கொள்ளுவேன்.

கும்புக்கஹ, கோணபொல, கெஸ்பேவா, 1940 ம் ஸ்ரீ மார்ச்சுமீ 19 ந உ.

பீ. கபோசிங்ஹ,

காங்கேசன்துறை ஆறுமுகம் விஜசித்தம்பியாகிய நான் திரிகோணமலைப் பகுதியில் தமிழ்ப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசாகக் கடமை செய்ய ஏற்றுக்கொள்ளும்படி கேட்க எண்ணியிருக்கிறேன் என்பதை இதனால் அறிவிக்கிறேன்.

காங்கேசன்துறை,
1940 ம் ஸ்ரீ எப்பிறல்மீ 27 ந உ.

ஆ. விஜசித்தம்பி.

---

சுன்னாகத்தைச்சார்ந்த கந்தரோடையில் வசிக்கும் மகாகணபதிக் குருக்கள் இராமலிங்க ஐயராகிய நான், யாழ்ப்பாணப் பகுதியில் பிரசித்த நொத்தாரிசாகக் கடமைசெய்ய ஏற்றுக்கொள்ளும்படி கேட்க எண்ணியிருக்கிறேன் என்பதை இதனால் அறிவிக்கிறேன்.

1940 ம் ஸ்ரீ எப்பிறல்மீ 27 ந உ.

ம. இராமலிங்க ஐயர்,

---

1907 ம் ஆண்டின் 1 ம் இல. சட்டம் 8 ம் விதிக்கமைய
1 ம் அட்டவணை B 2 ம் விதி.

யாழ்ப்பாணம் கரம்பன் பொன்னம்பலம் இராமலிங்கமாகிய நான் தமிழ்ப்பாஷையில் மட்டக்களப்புப் பிரிவில் கடமையாற்றுவதற்கு என்னைப் பிரசித்த நொத்தாரிசுவா யேற்றுக்கொள்ளும்படி விண்ணப்பஞ் செய்யவிருக்கிறேனென்பதை இதனாலறிவிக்கின்றேன்.

Karampan, Kayts,
8-5-40.

P. Ramalingam,

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.